தந்துகொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி இருக்கின்ற நிலையைத் தவிர்க்க, அரசு அவசர உணர்வோடு இதில் தலையிட்டு தேவைப்படும் முக்கியமான இடங்களுக்கு உடனடியாக அதிகப்படியான பணத்தை ஒதுக்கீடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலைகள் போடுகின்ற நிதி என்பது மாநில அரசின் நிதியிலிருந்து ஒதுக்கப்படுகிறது. ஆண்டுக்கு 10, 15 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய நெருக்கடி இருக்கிறது. இப்போது 3 அல்லது 5 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அதுவும் குறைந்த அளவிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இப்போது விலைவாசி அதிகமாக உள்ள சூழ்நிலையில் அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அதைத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையில் சாலைகள் போடுகின்ற நேரத்திலும் சில நேரங்களில் இயற்கையின் காரணமாக போக்குவரத்தால் சாலைகள் பழுதடைகின்ற சூழ்நிலையும், சில நேரங்களில் சாலைகளை பயன்படுத்துகின்றவர்களால் பழுதடைகின்ற சூழ்நிலையும் இருப்பதால் இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்துதான் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போளூர் நகரப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தல்.

37—(*வினா எண். 9579) திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் நகரிலுள்ள பஸ் நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) இல்லை (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1987 நவம்பர் 11]

(முற்பகல் 10-30)

திரு. ஜெ. ராஜாபாபு: தலைவரவர்களே, போளூரிலுள்ள பேருந்து நிலையத்திற்கு நாள் ஒன்றுக்கு 200 பஸ்கள் வருகின்றன. அங்கே இடவசதி இல்லாத காரணத்தால் வழியிலும் மரத்தடியிலும் பஸ்கள் நிற்கின்றன. அதனால் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும், போளூர் பகுதி வளர்ந்து வருகிற ஒரு பகுதியாக இருக்கிறது. ஆகையால் அந்தப் பகுதியிலுள்ள மக்களின் குறைகளைப் போக்க ஒரு புதிய பஸ் நிலையத்தை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் இதைப் போன்ற திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தப் பேரூராட்சியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே கடைகள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்து, கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் கட்டி முடிக்கப்பட்டுள்ள கடைகளுக்கு எல்லாம் வருவாய் வருவதற்கு உரிய வகைகளில் முறையாக ஏலம் விடப்பட்டோ அல்லது மற்ற வகையிலோ செய்ய வேண்டிய பணிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற தகவல் இருக்கிறது. பேருந்து நிலையம் மிகவும் முக்கியமான தேவை என்று தெரிகிறது. ஏற்கெனவே கொடுக்கப்பட்ட நிதியில் கட்டப்பட்டுள்ள கடைகளை அந்த நிர்வாகம் சரியாக மக்களுக்குப் பயன்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டு, அதற்குப் பின்னால் புதிதாக இந்தப் பேருந்து நிலையம் கட்டும் முயற்சியில் ஈடுபடுகிறபோது, இருக்கின்ற நிதிநிலைமையை ஒட்டி இதை அரசு பரிசீலிக்கும்.

கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக்கும் திட்டம்.

38—(*வினா எண். 13804) திரு. சி. சுப்புராயர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் கூடலூர் பேரூராட்சியை நகரசபை ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?